இனிமையான குழந்தைகளே! குழந்தைகளாகிய உங்களை அலங்கரிப்பதற்காக பாபா வந்திருக்கிறார், அனைத்திலும் நல்லது தூய்மையின் அலங்காரமாகும்.

கேள்வி: முழுமையாக 84 பிறவிகள் எடுப்பவர்களின் முக்கிய அடையாளம் என்னவாக இருக்கும்?

பதில்: அவர்கள் தந்தை என்பதன் கூடவே ஆசிரியர் மற்றும் சத்குரு மூவரையும் சேர்த்தே நினைவு செய்வார்கள். தந்தை நினைவு வந்தால் ஆசிரியர் மறந்து போகும் என்பதில்லை. எப்போது மூவரையும் நினைவு செய்கிறீர்களோ, அப்போது தான் கிருஷ்ணபுரி செல்ல முடியும். அதாவது ஆரம்பத்திலிருந்து பாகத்தை நடிக்க முடியும். 2. அவர்களை ஒருபோதும் மாயாவின் புயல்களால் தோற்கடிக்க முடியாது.

ஓம் சாந்தி. பாபா முதலில் குழந்தைகளுக்குச் சொல்கிறார் - நாம் தந்தைக்கு முன், ஆசிரியருக்கு முன் மற்றும் சத்குருவுக்கு முன் அமர்ந்திருக்கிறோம் என்பதை நீங்கள் மறந்து விடவில்லையே? அனைவருமே இந்த நினைவில் அமர்ந்துள்ளனர் என பாபா புரிந்து கொள்ள வில்லை. இருந்தாலும் பாபாவின் கடமை புரிய வைப்பதாகும். இது அர்த்தத்துடன் கூட நினைவு செய்வதாகும். நம்முடைய பாபா எல்லையற்ற தந்தையாகவும் உள்ளார். மேலும் நிச்சயமாக நம்முடைய சத்குருவாகவும் இருந்து குழந்தைகளை உடன் அழைத்துச் செல்கிறார். பாபா வந்திருப்பதே குழந்தைகளை து்ய்மை என்ற அலங்காரம் செய்வதற்காக வந்துள்ளார். செல்வமும் அளவற்றதாகக் கொடுக்கிறார். செல்வம் கொடுப்பது புது உலகத்திற்காக. அங்கே தான் நீங்கள் செல்ல வேண்டும். இதைக் குழந்தைகள் நினைவு செய்ய வேண்டும். குழந்தைகள் கவனக்குறைவாலும் தவறு செய்வதாலும் மறந்து போகின்றனர். முழுமையாக இருக்க வேண்டிய குஷி குறைந்து விடுகின்றது. இப்படிப்பட்ட தந்தையோ ஒருபோதும் கிடைக்க மாட்டார். நீங்கள் அறிவீர்கள், நாம் நிச்சயமாக பாபாவின் குழந்தைகள் தான். அவர் நமக்குப் படிப்பு சொல்லித் தருகிறார். ஆகவே அவர் ஆசியராகவும் இருக்கிறார். நம்முடைய படிப்பே புது உலகமாகிய அமரபுரிக்கானது. இப்போது நாம் சங்கமயுகத்தில் அமர்ந்துள்ளோம். இந்த நினைவோ அவசியம் குழந்தைகளுக்கு இருக்க வேண்டும். மிகவும் உறுதியாக நினைவு செய்ய வேண்டும். இதையும் அறிவீர்கள், இச்சமயம் கம்சபுரி, அசுர உலகில் உள்ளோம். யாருக்காவது சாட்சாத்காரம் ஆகிறது என வைத்துக் கொண்டாலும் சாட்சாத்காரத்தினால் யாரும் கிருஷ்ண புரிக்கு அல்லது அதன் இராஜ்யத்திற்கு வர முடியாது. தந்தை, ஆசிரியர், குரு மூவரையுமே எப்போது நினைவு செய்து கொண்டே இருப்பார்களோ, அப்போது தான் போக முடியும். இதை ஆத்மாக்களிடம் சொல்கிறார். ஆம் பாபா என்று ஆத்மா தான் சொல்கிறது. பாபா, நீங்களோ உண்மையைச் சொல்கிறீர்கள். பாபா நீங்கள் தந்தையாகவும் இருக்கிறீர்கள், படிப்பு சொல்லித் தரும் ஆசிரியராகவும் இருக்கிறீர்கள். சுப்ரீம் ஆத்மா கற்பிக்கிறார். லௌகிகப் படிப்பும் கூட ஆத்மா தான் சரீரத்துடன் கூட கற்பிக்கின்றது. ஆனால் அந்த ஆத்மா தூய்மை இல்லை என்றால் சரீரமும் தூய்மை அற்றதே நாம் நரகவாசி என்பது உலக ஆத்மாக்களுக்குத் தெரியாது.

இப்போது நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள், நாம் நம்முடைய உலகத்திற்குச்

செல்ல வேண்டும். இது உங்களுடைய வசிப்பிடம் (உலகம்) கிடையாது. இது இராவணனுடைய வேறொரு உலகமாகும். உங்களுடைய உலகத்திலோ அளவற்ற சுகம் இருக்கும். காங்கிரஸ் காரர்கள் நாம் வேறொரு தேசத்தில் இருக்கிறோம் என உணரவில்லை. முன்பு முஸ்லிம்களின் இராஜ்யத்தில் வசித்திருந்தனர். பிறகு கிறிஸ்தவர்களின் இராஜ்யத்தில் வசித்திருந்தனர். இப்போது நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள், நாம் நம்முடைய இராஜ்யத்திற்குச் செல்கிறோம். முன்பு இராவண ராஜ்யத்தை நாம் நம்முடைய இராஜ்யம் என நினைத்திருந்தோம். நாம் முதலில் இராம இராஜ்யத்தில் இருந்தோம் என்பதை மறந்து விட்டனர். பிறகு 84 பிறவிகளின் சக்கரத்தில் வருவதால் இராவண இராஜ்யத்தில் துக்கத்தில் வந்துள்ளோம். வேறொரு இராஜ்யத் திலோ துக்கம் தான் இருக்கும். இந்த ஞானம் முழுவதும் உள்ளுக்குள் வர வேண்டும். தந்தையின் நினைவு அவசியம் வரும். ஆனால் மூவரையும் நினைவு செய்ய வேண்டும். இந்த ஞானத்தையும் மனிதர்கள் தான் கற்றுக் கொள்ள முடியும். மிருகங்களோ படிக்காது. இதையும் குழந்தைகள் நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள், அங்கே ஒன்றும் வக்கீலுக்கான படிப்பெல்லாம் இருக்காது. பாபா இங்கே தான் உங்களை பெரும் செல்வம் நிறைந்தவர்களாக ஆக்கிக் கொண்டிருக்கிறார். ஆக, அனைவரும் இராஜாவாக மாட்டார்கள். வியாபாரமும் நடக்கும். ஆனால் உங்களுக்கு அளவற்ற செல்வம் இருக்கும். நஷ்டம் முதலியவை ஏற்படு வதற்கான சட்டமே கிடையாது. கொள்ளையடிப்பது முதலியன அங்கே இருக்காது. பெயரே சொர்க்கம். இப்போது குழந்தைகள் உங்களுக்கு நினைவு வந்து விட்டது - நாம் சொர்க்கத்தில் இருந்தோம் என்பது. பிறகு மறுபிறவி எடுத்து-எடுத்துக் கீழே இறங்கியிருக்கிறோம். பாபா கதையும் கூட அவர்களுக்குத் தான் சொல்கிறார். 84 பிறவிகள் எடுத்திருக்கவில்லை என்றால் மாயா தோற்கடித்து விடும். இதையும் பாபா புரிய வைத்துக் கொண்டே இருக்கிறார். மாயாவினுடையது எவ்வளவு பெரிய புயல்! அநேகரை மாயா தோற்கடிக்க முயற்சி செய்கிறது. இன்னும் போகப்போக நீங்கள் அதிகம் பார்ப்பீர்கள், கேட்பீர்கள்.

பாபாவிடம் அனைவரின் சித்திரங்கள் இருக்குமானால் உங்களுக்கு அற்புதத்தைக் காட்டுவார் - இன்னார் இவ்வளவு நாள் வந்தார், பாபாவுடையவராக ஆனார், பிறகு மாயா விழுங்கி விட்டது. இறந்து விட்டார். மாயாவோடு சென்று கலந்து விட்டார். இங்கே இச்சமயம் யாராவது சரீரத்தை விட்டால் இதே உலகத்தில் வந்து பிறவி எடுப்பார்கள். நீங்கள் சரீரம் விட்டால் பாபாவுடன் கூட எல்லையற்ற வீட்டுக்குச் சென்று விடுவீர்கள். அங்கே பாபா, மம்மா, குழந்தைகள் அனைவரும் உள்ளனர் இல்லையா? பரிவாரம் இதுபோல் தான் இருக்கும். மூலவதனத்தில் தந்தை மற்றும் சகோதர-சகோதரர்கள். வேறு எந்த ஒரு சம்மந்தமும் கிடையாது. இங்கே தந்தை மற்றும் சகோதர-சகோதரிகள். பிறகு விருத்தியடையும். பாபா, மம்மா முதலிய அநேக சம்மந்தங்கள் ஆகி விடும். இந்த சங்கமயுகத்தில் நீங்கள் பிரஜாபிதா பிரம்மாவுடையவர்களாக ஆகிறீர்கள் என்றால் சகோதர- சகோதரிகள் ஆகிறீர்கள். சிவபாபாவின் நினைவு செய்கிறீர்கள் என்றால் சகோதர-சகோதரர்கள். இந்த அனைத்து விஷயங்களையும் நல்லபடியாக நினைவு செய்ய வேண்டும். அநேகக் குழந்தைகள் மறந்து போகின்றனர். பாபாவோ புரிய வைத்துக் கொண்டே இருக்கிறார். தந்தையின் கடமை குழந்தைகளைத் தலை மீது தூக்கி வைப்பது (உயர்த்துவது). அதனால் தான்

நமஸ்தே-நமஸ்தே எனச் சொல்லிக் கொண்டே இருக்கிறார். அர்த்தத் தையும் புரிய வைக்கிறார். பக்தி செய்யக் கூடிய சாது-சந்நியாசி முதலியவர்கள் யாரும் உங்களுக்கு ஜீவன் முக்திக்கான வழி சொல்வதில்லை. அவர்கள் முக்திக்காகத் தான் முயற்சி செய்து கொண்டே உள்ளனர். அவர்கள் துறவற மார்க்கத்தினர். அவர்கள் இராஜயோகம் எப்படிக் கற்பிப்பார்கள்? இராஜயோகமே இல்லற மார்க்கத்தினுடையது. பிரஜாபிதா பிரம்மா வுக்கு 4 புஜங்கள் கொடுக்கின்றனர். அதனால் இல்லற மார்க்கம் ஆகிறது இல்லையா? இங்கே பாபா இவர்களைத் தத்தெடுத்துள்ளார் என்றால் பெயர் பிரம்மா மற்றும் சரஸ்வதி என்று வைத்துள்ளார். டிராமாவில் எப்படி விதிக்கப்பட்டுள்ளது பாருங்கள்! வானப்ரஸ்த நிலையில் தான் மனிதர்கள் குருவை ஏற்பாடு செய்து கொள்கிறார்கள், 60 வயதுக்குப் பிறகு. இவருக்குள் பாபா வந்து பிரவேசமாகி யிருக்கிறார் என்றால் தந்தை, ஆசிரியர், குரு ஆகி விட்டார். இப்போதோ விதிமுறையே கெட்டுப் போயுள்ளது. சிறிய குழந்தைகளைக் கூட குருவாக ஆக்கிக் கொள்கின்றனர். இவரோ நிராகார். ஆத்மாக்களாகிய உங்களுக்கு இவர் தந்தையும் ஆகிறார், ஆசிரியர், சத்குருவும் ஆகிறார். நிராகாரி உலகம் ஆத்மாக்களின் உலகம் எனச் சொல்லப் படுகின்றது. உலகமே இல்லை எனச் சொல்ல மாட்டார்கள். சாந்திதாமம் எனச் சொல்லப்படுகின்றது. அங்கே ஆத்மாக்கள் வசிக்கிறார்கள். பரமாத்மாவுக்கு பெயர், வடிவம், தேசம், காலம் எல்லாம் கிடையாது எனச் சொன்னால் பிறகு எங்கிருந்து வருவார்?

குழந்தைகள் இப்போது புரிந்து கொண்டீர்கள், இந்த உலகத்தின் சரித்திரம்-பூகோளம் எப்படி திரும்பவும் அதேபோல் நடைபெறுகின்றது என்று. பூகோளமோ ஜடப்பொருளினுடையது. ஆத்மா நீங்கள் அறிவீர்கள், நாம் எதுவரை இராஜ்யம் செய்கிறோம் என்று. சரித்திரம் பாடப் படுகின்றது. அது கதை எனச் சொல்லப்படுகின்றது. பூகோளம் தேசத்தினுடையது. சைதன்ய மானவர்கள் இராஜ்யம் செய்தார்கள். ஜடமோ இராஜ்யம் செய்ய இயலாது. எவ்வளவு காலம் இன்னாருடைய இராஜ்யம் இருந்தது, கிறிஸ்தவர்கள் பாரதத்தில் எப்போதிருந்து எப்போது வரை இராஜ்யம் செய்தார்கள்? ஆக, இந்த உலகத்தின் சரித்திரம்-பூகோளம் பற்றி யாருக்கும் தெரியாது. சத்யுகத்திற்கோ இலட்சம் ஆண்டுகள் ஆகி விட்டது எனச் சொல்கின்றனர். அதில் யார் இராஜ்யம் செய்து சென்றார்கள், எவ்வளவு காலம் இராஜ்யம் செய்தார்கள்? - இதை யாரும் அறிந்திருக்கவில்லை. இது சரித்திரம் எனச் சொல்லப்படும். ஆத்மா சைதன்யமானது. சரீரம் ஜடமாகும். முழு விளையாட்டுமே சைதன்யம் மற்றும் ஜடத்தினுடையது. மனித வாழ்க்கையே உத்தமமானது எனப் பாடப்படுகின்றது. எண்ணிக்கை எத்தனை என்பதும் மனிதர்களுடையது தான் எடுக்கப் படுகின்றது. மிருகங்களுடையதோ யாரும் எண்ணிப் பார்க்கவும் முடியாது. முழு விளையாட்டும் உங்களைப் பற்றியது. சரித்திர-பூகோளமும் நீங்கள் கேட்கிறீர்கள். சிவ பாபா இவருக்குள் வந்து உங்களுக்கு அனைத்து விஷயங்களையும் புரிய வைக்கிறார். இது எல்லை யற்ற சரித்திர-பூகோளம் எனச் சொல்லப்படுகின்றது. இந்த ஞானம் இல்லாத காரணத்தால் நீங்கள் எவ்வளவு புத்தியற்றவர்களாக ஆகி விட்டிருக்கிறீர்கள்! மனிதர்களாக இருந்து கொண்டு உலகத்தின் சரித்திர-பூகோளம் தெரியாது எனச் சொன்னால் அந்த மனிதர்கள் என்ன வேலைக் காவார்கள்? இப்போது பாபாவிடமிருந்து நீங்கள் உலகத்தின் சரித்திர-பூகோளம் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இந்தப் படிப்பு எவ்வளவு நன்றாக உள்ளது! யார் சொல்லித் தருகிறார்? தந்தை. தந்தை தான்

உயர்ந்ததிலும் உயர்ந்த பதவி கிடைக்கச் செய்கிறார். இந்த லட்சுமி-நாராயணர் மற்றும் அவர்களுடன் சொர்க்கத்தில் இருப்பவர்களுக்கு உயர்ந்ததிலும் உயர்ந்த பதவி இல்லையா? அங்கே வக்கீல் தொழில் முதலியவற்றையோ யாரும் செய்வதே இல்லை. இங்கோ கற்றுக் கொள்ள வேண்டும், அவ்வளவு தான். கலையைக் கற்றுக் கொள்ளவில்லை என்றால் கட்டடங்கள் முதலானவற்றை எப்படிக் கட்டுவது? ஒருவர் மற்றவருக்குக் கலையைக் கற்றுக் கொடுக்கின்றனர். இல்லையென்றால் இவ்வளவு கட்டடங்கள் முதலியவற்றை யார் கட்டுவார்கள்? தாமாகவோ உருவாகி விடாது. இந்த அனைத்து ரகசியங்களும் இப்போது குழந்தைகளாகிய உங்களது புத்தியிலும் நம்பர்வார் புருஷ ர்த்தத்தின் அனுசாரம் உள்ளது. நீங்கள் அறிவீர்கள், இந்தச் சக்கரம் சுற்றிக் கொண்டே உள்ளது. இவ்வளவு காலம் நாம் இராஜ்யம் செய்திருந்தோம். பிறகு இராவணனின் இராஜ்யத்தில் வருகிறோம். உலகத்திற்கு இந்த விஷயங்கள் பற்றித் தெரியாது - அதாவது நாம் இராவண இராஜ்யத்தில் இருக்கிறோம் என்று. எங்களை இராவண இராஜ்யத்திலிருந்து விடுவியுங்கள் என்று சொல்கின்றனர். காங்கிரஸ் காரர்கள் கிறிஸ்தவ இராஜ்யத்தில் இருந்து தங்களை விடுவித்துக் கொண்டனர். இப்போது பிறகு சொல்கின்றனர், காட் ஃபாதர்! எங்களை விடுவியுங்கள் என்று. நினைவு வருகிறது இல்லையா? யாருமே இதை அறிந்து கொள்ளவில்லை, இவர்கள் ஏன் இப்படிச் சொல்கிறார்கள் என்று. இப்போது நீங்கள் புரிந்து கொண்டு விட்டீர்கள், முழு உலகத்திலும் இராவண இராஜ்யம் உள்ளது. அனைவரும் இராம இராஜ்யம் வேண்டும் எனக் கேட்கின்றனர் என்றால் யார் விடுவிப்பார்கள்? காட் ஃபாதர் விடுவித்து வழிகாட்டி ஆகி அழைத்துச் செல்வார் என நினைக்கின்றனர். பாரதவாசிகளுக்கு அவ்வளவு புத்தி கிடையாது. இவர்களோ முற்றிலும் தமோபிரதானமாக உள்ளனர். அவர்கள் (வெளிநாட்டினர்) இவ்வளவு துக்கத்தைப் பெறுவதும் இல்லை, இவ்வளவு சுகம் அடைவதும் இல்லை. பாரதவாசிகள் அனைவரைக் காட்டிலும் அதிக சுகம் பெறுகிறார்கள் என்றால் துக்கமும் அடைந்துள்ளனர். கணக்கு உள்ளதல்லவா? இப்போது எவ்வளவு துக்கம்! தர்ம சிந்தனை உள்ளவர்கள் நினைவு செய்கின்றனர் - ஓ காட் ஃபாதர்! விடுவிப்பவரே! என்று. உங்களுடைய மனதிலும் உள்ளது பாபா, வந்து எங்கள் துக்கத்தைப் போக்குங்கள், சுகதாமம் அழைத்துச் செல்லுங்கள். அவர்கள் சொல்கின்றனர், சாந்திதாமம் அழைத்துச் செல்லுங்கள் என்று. நீங்கள் சொல்வீர்கள், சாந்திதாமம் மற்றும் சுகதாமம் அழைத்துச் செல்லுங்கள் என்று. இப்போது பாபா வந்துள்ளார் என்றால் மிகுந்த குஷி இருக்க வேண்டும். பக்தி மார்க்கத்தில் காதுக்கு இனிமையானவற்றைக் கேட்பது எவ்வளவு உள்ளது! அவற்றில் உண்மையான விஷயங்கள் எதுவும் கிடையாது. முற்றிலும் மாவில் சிறிது உப்பு போல் மிகக் கொஞ்சம் தான் உண்மை இருக்கும். சண்டிகா தேவிக்கும் கூடத் திருவிழா நடைபெறுகின்றது. இப்போது சண்டிகளுக்கு ஏன் திருவிழா நடைபெறுகின்றது? சண்டி எனச் சொல்லப் படுபவர் யார்? பாபா சொல்லியிருக்கிறார், சண்டாளர்களின் பிறவியும் கூட இங்குள்ளவர்கள் தான் எடுக்கின்றனர். இங்கே இருந்து கொண்டு உண்டு, அருந்திக் கொண்டு கொஞ்சமாகக் கொடுத்து விட்டுப் பிறகு சொல்கின்றனர் - நான் கொடுத்ததை எனக்குத் திரும்பக் கொடுங்கள், நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று. சந்தேகம் வந்து விட்டால் அவர்கள் போய் என்னவாக ஆவார்கள்? அத்தகைய சண்டிகாவுக்கும் கூடத் திருவிழா நடைபெறுகின்றது. இருந்தாலும் சத்யுகத்தவராகவோ ஆகின்றனர் இல்லையா? கொஞ்ச காலத்துக்கு உதவி யாளராக ஆனதால் சொர்க்கத்தில் வந்து விடுகின்றனர். அந்த

பக்த ஜனங்களுக்கோ தெரியாது. ஞானம் யாரிடமும் கிடையாது. அந்தச் சித்திரங்களுடன் கூடிய கீதையை வைத்து எவ்வளவு பணம் சம்பாதிக்கின்றனர்! தற்போது சித்திரங்கள் மீதோ அனைவரும் கவர்ச்சியாகி விடுகின்றனர். அதைக் கலை என நினைக்கின்றனர். தேவதைகளின் சித்திரம் எப்படி இருக்கும் என்பது மனிதர்களுக்கு எங்கே தெரியும்? நீங்கள் முதல்-முதலில் (சத்யுகத்தில்) எவ்வளவு முதல் தரமானவர்களாக இருந்தீர்கள்! பிறகு என்னவாக ஆகி விட்டீர்கள்! அங்கே குருடர், கூனல் விழுந்தவர் யாரும் இருக்க மாட்டார்கள். தேவதைகளுக்கு இயற்கையான அழகு இருக்கும். அங்கே இயற்கை அழகு இருக்கும். ஆக, பாபாவும் கூட அனைத்தையும் புரிய வைத்துவிட்டுப் பிறகு சொல்கிறார் - குழந்தைகளே, தந்தையை நினைவு செய்யுங்கள். தந்தை தந்தையாகவும் இருக்கிறார், ஆசிரியர், சத்குருவாகவும் இருக்கிறார். மூன்று ரூபங்களிலும் நினைவு செய்வீர்களானால் மூன்று விதமான ஆஸ்திகளும் கிடைக்கும். பின்னால் வரக் கூடியவர்கள் மூன்று ரூபத்தில் நினைக்க முடியாது. பிறகு முக்தியில் சென்று விடுவார்கள்.

பாபா புரிய வைத்துள்ளார், சூட்சுமவதனம் முதலியவற்றில் என்னென்ன பார்க்கிறீர்களோ, அவை சாட்சாத்காரத்தின் விஷயங்கள். மற்றப்படி சரித்திர-பூகோளம் முழுவதும் இங்கே (ஸ்தூல உலகம்) உள்ளது தான். இதனுடைய ஆயுள் பற்றி யாருக்கும் தெரியாது. இப்போது குழந்தைகளாகிய உங்களுக்கு பாபா புரிய வைத்துள்ளார், நீங்கள் பிறகு யாருக்கு வேண்டுமானாலும் புரிய வைக்க முடியும். முதல்-முதலிலோ பாபாவின் அறிமுகம் கொடுக்க வேண்டும். அந்த எல்லையற்ற தந்தை தான் சுப்ரீம் (மிக மேலானவர்). லௌகிகத் தந்தையை பரமாத்மா அல்லது சுப்ரீம் ஆத்மா என்று ஒருபோதும் சொல்வதில்லை. சுப்ரீம் ஒருவர் தான். அவர் தான் பகவான் எனச் சொல்லப் படுகிறார். அவர் ஞானம் நிறைந்தவர் என்பதால் உங்களுக்கு ஞானம் கற்றுத் தருகிறார். இந்த ஈஸ்வரிய ஞானம் வருமானத்துக்கு ஆதாரம். ஞானமும் கூட உத்தமம், மத்யம், கனிஷ்டம் என்று இருக்கிறது இல்லையா? பாபா உயர்ந்த வரிலும் உயர்ந்தவர் என்றால் படிப்பும் உயர்ந்ததிலும் உயர்ந்தது. பதவியும் உயர்ந்தது. சரித்திர-பூகோளத்தையோ உடனே அறிந்து கொள்கின்றனர். மற்றப்படி நினைவு யாத்திரையில் யுத்தம் நடைபெறுகின்றது. இதில் நீங்கள் தோல்வியடைகிறீர்கள் என்றால் ஞானத்திலும் நீங்கள் தோல்வியடைகிறீர்கள். தோல்வியடைந்து ஓடி விடுகின்றனர் என்றால் ஞானத்தில் இருந்தும் கூட ஓடிப்போகின்றனர். பிறகு எப்படி இருந்தனரோ, அப்படியே ஆகி விடுகின்றனர். மேலும் அதைவிட மோசமாக ஆகி விடுகின்றனர். பாபாவின் முன்னிலையில் நடத்தையினால் தேக அபிமானம் உடனே தெரிய வருகின்றது. பிராமணர்களின் மாலையும் உள்ளது. ஆனால் அநேகருக்குத் தெரிவதே இல்லை-நாம் எப்படி நம்பர்வார் இங்கே அமர்ந்துள்ளோம் என்று. தேக அபிமானம் உள்ளது இல்லையா? நிச்சயம் உள்ளவர்களுக்கு அவசியம் அளவற்ற குஷி இருக்கும். யாருக்காவது நிச்சயம் உள்ளதா-நாம் இந்த சரீரத்தை விட்டு இளவரசர் ஆவோம் என்று? (அனைவரும் கை உயர்த்தினர்). குழந்தைகளுக்கு இவ்வளவு குஷி உள்ளது. உங்கள் அனைவருக்குமோ முழுமையாக தெய்விக குணங்கள் இருக்க வேண்டும் -நிச்சயம் இருப்பதால். நிச்சயபுத்தி என்றால் வெற்றியாளர்களின் மாலையில் மணிகளாக வருவார்கள், அதாவது இராஜகுமார் ஆவார்கள். ஒரு நாள் நிச்சயமாக வரும், அப்போது வெளிநாட்டினர் இங்குள்ள அனைவரைக்

காட்டிலும் அதிகமாக அபுவுக்கு வருவார்கள். மற்ற தீர்த்த யாத்திரை களை எல்லாம் விட்டு விடுவார்கள். பாரதத்தின் இராஜயோகத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர். சொர்க்கத்தை ஸ்தாபனை செய்தவர் யார்? புருஷார்த்தம் செய்யப் படுகிறது-கல்பத்திற்கு முன் இது நடந்திருக்குமானால் நிச்சயமாக மியுசியம் உருவாகி விடும். புரிய வைக்க வேண்டும் - இதுபோன்ற கண்காட்சி சதா காலத்திற்கும் நடத்த விரும்புகிறோம். 4-5 ஆண்டுகளுக்கு லீஸில் (குத்தகை) கூட கட்டடம் எடுத்து வைக்க முடியும். நாம் பாரதத்திற்குத் தான் சேவை செய்கிறோம், சுகதாமம் ஆக்குவதற்காக. இதனால் அநேகருக்கு நன்மை ஏற்படும். நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக்கண்டெடுக்கப் பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே!

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) அளவற்ற குஷியில் இருப்பதற்கு சதா இந்த நினைவு இருக்க வேண்டும்: சுயம் தந்தை நமக்கு அலங்காரம் செய்து கொண்டிருக்கிறார். அவர் நமக்கு அளவற்ற செல்வத்தைக் கொடுக்கிறார். நாம் அமரபுரி புது உலகத்திற்காகப் படித்துக் கொண்டிருக்கிறோம்.

2) வெற்றி மாலையில் வருவதற்காக நிச்சயபுத்தி உள்ளவராகி தெய்வீக குணங்களை தாரணை செய்ய வேண்டும். எதைக் (தானமாக) கொடுத்து விட்டோமோ, அதைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான சங்கல்பம் ஒருபோதும் வரக் கூடாது. சந்தேக புத்தி உள்ளவராகி தனது பதவியை இழந்துவிடக் கூடாது.

வரதானம்: கோபமுடைய ஆத்மாவிற்கு கருணையின் குளிர்ந்த ஜலம் மூலமாக குணதானம் கொடுக்கக் கூடிய வரதானி ஆத்மா ஆவீர்களாக.

உங்களுக்கு முன்னால் யாராவது கோபத்தீயில் எரிந்த படியே வருகிறார், உங்களை திட்டுகிறார், நிந்தனை செய்கிறார் என்றால் அப்பேற்பட்ட ஆத்மாவிற்கு கூட தங்களது சுபபாவனை நல்விருப்பம் மூலமாக, உள்ளுணர்வு மூலமாக, ஸ்திதி மூலமாக குணதானம் அல்லது சகிப்புத் தன்மையின் சக்தியின் வரதானம் கொடுங்கள். கோபம் கொண்ட ஆத்மா வசப்பட்டுள்ளார். அப்பேர்ப்பட்ட வசப்பட்டிருக்கும் ஆத்மாவை கருணையின் குளிர்ந்த ஜலம் மூலமாக அமைதிப் படுத்தி விடுங்கள்.இது வரதானி ஆத்மாவாகிய உங்களது கடமை ஆகும். உயிரோட்டமாக (சைதன்யத்தில்) உங்களுக்குள் நீங்கள் அப்பேர்ப்பட்ட சம்ஸ்காரத்தை நிரப்பிக் கொண்டி ருக்கிறீர்கள். அதனால் தான் ஜட சித்திரங்கள் மூலமாக பக்தர்களுக்கு வரதானம் கிடைக் கின்றது.

சுலோகன்: நினைவின் மூலமாக அனைத்து சக்திகளின் பொக்கிசங்களை அனுபவம் செய்பவர்கள் தான் சக்தியில் நிறைந்தவர்களாக ஆகிறார்கள்.